27.04.2026.
O.S.No. 139/2018

வா. சா. 2 கலைச்செல்வன் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

சாட்சி சொல்ல சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதியும் அவரது நண்பர் குப்புச்சாமியும் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வாதி ராமசாமி அழைத்ததன் பேரில் வந்துள்ளேன். என்னுடன் இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு குப்புச்சாமியும் வந்திருந்தார் என்றால் சரியல்ல. ராமசாமி மட்டும்தான் வந்தார். வாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரியல்ல. என் தாயார் பெயர் பொன்னுத்தாய். என் தாயார் கவுண்டப்ப கவுண்டரின் இளைய தாரத்து மகள் என்றால் சரிதான். கவுண்டப்ப கவுண்டரின் மூத்த தாரத்து மகள் வள்ளியம்மாள் என்றால் சரிதான். வள்ளியம்மாளின் கணவர் ராமசாமி கவுண்டர் என்றால் சரிதான். ராமசாமி கவுண்டரின் மூத்த தாரத்தின் பெயர் காளியம்மாள் என்றால் எனக்கு தெரியாது. ராமசாமி கவுண்டரின் மூத்த தாரத்து பேரன் வாதி ராமசாமி என்றால் சரிதான். எனவே எனக்கு அவர் உறவினர் என்றால் சரிதான். நானும் வாதி ராமசாமியும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் இல்லை. ஆனால் ஒரே ஊரில் இருந்து வருகிறோம் என்றால் சரிதான். பிரதிவாதி செந்தில்குமாரை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எப்படி தெரியும் என்றால் எனக்கு பழக்கம். 15.08.2015 ம் தேதி யார் அழைத்து நான் சென்றேன் என்றால் நான் கடைவீதியில் இருக்கும்போது பிரதிவாதி செந்தில்குமார் என்னிடம் வாதி ராமசாமியிடம் பணம் வாங்கவேண்டும், உடன்வரும்படி அழைத்தார். மேற்படி விவரத்தை நிரூபண

வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 15.08.2015 ம் தேதி நாங்கள் சென்றபின்னர்தான் வாதி ராமசாமி பணத்தை ஏற்பாடு செய்து வந்தாரா அல்லது ஏற்கனவே ஏற்பாடு செய்து வைத்திருந்தாரா என்றால் நாங்கள் போகும்போது அவர் ஏற்கனவே ஏற்பாடு செய்து பணத்தை வைத்திருந்தார். 15.08.2015 ம் தேதி வாதி ராமசாமியின் தோட்டத்து வீட்டில் வைத்து பணம் கொடுக்கப்பட்டது. 15.08.2015 அன்று விடுமுறைநாள் என்றால் எனக்கு தெரியாது. 15.08.2015 ம் தேதிக்கு முன்னர் பிரதிவாதி செந்தில்குமார் எப்போது வாதியிடம் பணம் கேட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி ராமசாமி ரூ.18 லட்சத்தை எவ்வாறு ஏற்பாடு செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா புரோநோட்டை வாதி ராமசாமி வாங்கி வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி செந்தில்குமார்தான் வாங்கிவந்தார். புரோநோட்டை குப்புசாமி என்பவர் எழுதினார் என்றால் சரிதான். பிரதிவாதி செந்தில்குமார் விவரம் சொல்ல குப்புச்சாமி எழுதினார். மேற்படி விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எங்கு வைத்து சொன்னேன் என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து சொன்னேன். ஐ.ஏ.1/2022 ல் மசாஆ 1 ஆக விசாரணை செய்யப்பட்டு உள்ள பிரதிவாதி செந்தில்குமாரின் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை சாட்சியிடம் காட்டி யாருடைய கையெழுத்து என கேள்வி எழுப்பியதற்கு சாட்சி பிரதிவாதி செந்தில்குமாரின் கையெழுத்து எனக் கூறினார். மேற்படி கையெழுத்தும் புரோநோட்டில் உள்ள பிரதிவாதியின் கையெழுத்து எனச்சொல்லப்படும் கையெழுத்துக்கும் வேறுபாடு காணப்படுகிறது என்றால் சரியல்ல. எனக்கு ஒரே மாதிரிதான்

தெரிகிறது. வாதசாஆ.1 புரோநோட்டில் பிரதிவாதியின் மேலே உள்ள கையெழுத்துக்கும், கீழே உள்ள கையெழுத்துக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. இரண்டு கையெழுத்தையும் அவர்தான் போட்டார். புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்கள் இரண்டுமே வித்தியாசமாக உள்ளது என்றும் அக்கையெழுத்துக்கள் இரண்டும் பிரதிவாதியினுடயது இல்லை என்றால் சரியல்ல. ஐ.ஏ.1/2022 ல் மசா1 ன் சாட்சியத்தில் கண்டுள்ள பிரதிவாதியின் கையெழுத்துக்கும் புரோநோட்டில் கண்டுள்ள கையெழுத்துக்கும் மாறுபடுகிறது என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டை நான், வாதி, குப்புச்சாமி ஆகியோர் சேர்ந்து தயார் செய்த புரோநோட்டு என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கைரேகை பிரதிவாதியின் கைரேகை இல்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

ஐ.ஏ.01/2022 ல் மசா1 ன் சாட்சியத்தில் கண்டுள்ள பிரதிவாதியின் கையெழுத்தானது 07.10.2023 ல் போடப்பட்ட கையெழுத்து என்றால் சரிதான்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.04.27 12:19:00 +0530

Principal District Judge,
Dindigul.